மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!!

## வாலாஜாபேட்டை நகராட்சி

## நகரமன்ற அவசரக்கூட்டம்

**வாலாஜாபேட்டை நகராட்சியில் 2020-ம் வருடம் ஜனவரி மாதம் 06-ந் தேதி திட்கள்கிழமை மாலை 04.00 மணியளவில் நகரமன்றக் கூடத்தில் நடைபெற்ற அவசரக்கூட்ட நடவடிக்கைகள்**

**முன்னிலை: திரு.எம்.நாகூர் மீரான் ஒலி, அவர்கள்**

**தனி அலுவலர்**

**மன்றப் பொருள்கள்**

1

வாலாஜாபேட்டை நகராட்சியில் 14th Central Finance Commission Scheme-2019-20ஆம் ஆண்டு திட்டத்தின் கீழ் பட்டியலில் கண்டுள்ளவாறு சாலைகள் அமைக்கும் பணி இரண்டு சிப்பமாக ரூ.86.45 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள கீழ்கானும் பணிகள் தேர்வு செய்யப்பட்டு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | சிப்பம் எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 1 | வாலாஜாபேட்டைநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.06, திருத்தனி தெத்து தெருவில் தார்சாலை, வார்டு எண். 09, த.நா.வீ.வ.வாரியம் 4வது குறுக்கு தெருவில் தார்சாலை, வார்டு எண். 11 வெற்றிலைகார தெரு தார்சாலை, மேற்கானும் பகுதிகளில் தார்சாலை அமைக்கும் பணிகள் | **50.00** |
| 2 | 2 | வாலாஜாபேட்டைநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.01, கடப்பரங்கையன் தெரு சந்தில் கால்வாயுடன் கூடிய சிமெண்ட்சாலை, வார்டு எண். 09, த.நா.வீ.வ.வாரியம் 13வது குறுக்கு தெருவில் சிமெண்ட்சாலை, வார்டு எண். 10, காந்தி நகர் பகுதியில் சிமெண்ட்சாலை, வார்டு எண். 12,பஜனை கோயில் தெருவில் கால்வாயுடன் கூடிய சிமெண்ட்சாலை, வார்டு எண். 20, விசாலாட்சி நகர் பகுதியில் சிமெண்ட்சாலை, மற்றும் வார்டு எண்.21, டீச்சர்ஸ் காலனி பகுதியில் கால்வாயுடன் கூடிய சிமெண்ட்சாலை, மேற்கானும் பகுதிகளில் சிமெண்ட்சாலை அமைக்கும் பணிகள் | **36.45** |
| | | **மொத்தம்** | 86.45 |

**அலுவலகக்குறிப்பு :–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. திட்ட மதிப்பீடு ரூ.86.45 இலட்சத்திற்க்கு மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி பணிகளை 14th Central Finance Commission Scheme-2019-20ஆம் ஆண்டு திட்டத்தின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.0025 /2020/இ1,

தனிஅலுவலர்(ம)ஆணையர்,
வாலாஜாபேட்டை நகராட்சி.

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!!

**வாலாஜாபேட்டை நகராட்சி**

**நகரமன்ற சாதாரணக் கூட்டம்**

**வாலாஜாபேட்டை நகராட்சியில் 2020-ம் வருடம் ஜனவரி மாதம் 31-ந் தேதி வெள்ளிக்கிழமை மாலை 04.00 மணியளவில் நகரமன்றக் கூடத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்**

**முன்னிலை: திரு.ஆர்.சந்திரசேகரன்,D.C.E., அவர்கள்**

**தனி அலுவலர்**

**மன்றப் பொருள்கள்**

1

மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர், வேலூர், அவர்களின் செயல்முறை கடிதத்தில் தெரிவித்துள்ளபடி 14th CFC Grant 2019-20-ம் ஆண்டு திட்டத்தின்கீழ் நிர்வாக அனுமதி அளித்துள்ள ஒதுக்கீட்டின்படி சிமெண்ட் சாலைகளுடன் கூடிய கால்வாய்கள் அமைக்கும் பணிக்கு மதிப்பீடு **ரூ.50.00** இலட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டதின் பேரில் 28.01.2020 அன்று மின்னணு மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மின்னணு ஒப்பந்த்ப்புள்ளிகள் ஏதும் வரப்பெறவில்லை.

மேற்படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளையும் தொழில்நுட்ப தகுதி ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில் மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ளது. அதனை தொடர்ந்து இவ்விரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விலை ஒப்பந்தப்புள்ளிகள் 30.01.2020 அன்று திறக்கப்பட்டது. மேலும், மதிப்பீடு விகிதத்திற்கு கூடுதலாக 4.99% ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள S.SureshKumar, Contractor, Rangapuram, Vellore.9, அவர்களுக்கு இவ்வலுவலக கடிதம் ந.க.எண்:0025/2020/இ1, நாள்:-30.01.2020ல் மேற்படி விலை விகிதங்கள் குறைத்து கொடுக்க கேட்டுக் கொள்ளப்ட்டது. மேற்படி ஒப்பந்ததாரர் தனது 31.01.2020ந் தேதிய கடிதத்தில் தற்சமயம் அரசு நிர்ணயித்த விலையை காட்டிலும் கட்டுமான பொருட்களின் விலை மற்றும் வேலை ஆட்களின் கூலி அதிகமாகவுள்ளதாகவும், எனவே ஒப்பந்தப்புள்ளியில் விலையை குறைத்து கொடுக்க இயலாது எனவும், மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்குமாறும் கோரியுள்ளார். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகின்றது.

| வ. எண் | பணியின் பெயர் | Mr.P.Radhakrishnan, Contractor, Rangapuram, Vellore.9. | Mr.S.SureshKumar, Contractor, Rangapuram, Vellore.9. |
|---|---|---|---|
| 1. | Providing BT Surface at Thiruthani Thethu Street Ward No.06, Providing BT Surface at TNHB 4th Cross Street Ward No.09, Providing BT Surface at Vetrilaikara Street Ward No.11 | மதீப்பீட்டை விட +7.12% கூடுதலாகவும் | மதீப்பீட்டை விட +4.99% கூடுதலாகவும் |

**அலுவலக குறிப்பு:**

1.மேற்படி பணியினை குறித்த காலத்தில் முடிக்க வேண்டியுள்ளதாலும் மதிப்பீட்டை விட 4.99% கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள S.SureshKumar, Contractor, Rangapuram, Vellore.9, அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை பணியின் அவசியம் கருதி மன்றம் ஏற்கலாம்.

**(ந.க.எண்:0025/2020/இ1).**

2

மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர், வேலூர், அவர்களின் செயல்முறை கடிதத்தில் தெரிவித்துள்ளபடி 14th CFC Grant 2019-20-ம் ஆண்டு திட்டத்தின்கீழ் நிர்வாக அனுமதி அளித்துள்ள ஒதுக்கீட்டின்படி சிமெண்ட் சாலைகளுடன் கூடிய கால்வாய்கள் அமைக்கும் பணிக்கு மதிப்பீடு **ரூ.36.45** இலட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டதின் பேரில் 28.01.2020 அன்று மின்னணு மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மின்னணு ஒப்பந்த்புள்ளிகள் ஏதும் வரப்பெறவில்லை.

மேற்படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளையும் தொழில்நுட்ப தகுதி ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில் மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ளது. அதனை தொடர்ந்து இவ்விரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விலை ஒப்பந்தப்புள்ளிகள் 30.01.2020 அன்று திறக்கப்பட்டது. மேலும், மதிப்பீடு விகிதத்திற்கு கூடுதலாக 4.95% ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள S.SureshKumar, Contractor, Rangapuram, Vellore.9, அவர்களுக்கு இவ்வலுவலக கடிதம் ந.க.எண்:0025/2020/இ1, நாள்:-30.01.2020ல் மேற்படி விலை விகிதங்கள் குறைத்து கொடுக்க கேட்டுக் கொள்ளப்பட்டது. மேற்படி ஒப்பந்ததாரர் தனது 31.01.2020ந் தேதிய கடிதத்தில் தற்சமயம் அரசு நிர்ணயித்த விலையை காட்டிலும் கட்டுமான பொருட்களின் விலை மற்றும் வேலை ஆட்களின் கூலி அதிகமாகவுள்ளதாகவும், எனவே ஒப்பந்தப்புள்ளியில் விலையை குறைத்து கொடுக்க இயலாது எனவும், மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்குமாறும் கோரியுள்ளார். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகின்றது.

| வ. எண் | பணியின் பெயர் | Mr.P.Radhakrishnan, Contractor, Rangapuram, Vellore.9. | Mr.S.SureshKumar, Contractor, Rangapuram, Vellore.9. |
|---|---|---|---|
| 1. | Providing CC Road with SWD at Kadaparangaiyan Street Lane Ward No.01, Providing CC Road at TNHB 13th Cross Street, Ward No.09, Providing CC Road at Gandhi Nagar, Ward No.10, Providing CC Road with SWD at Bajanai Koil Street, Ward No.12, Providing CC Road at Visalatchi Nagar, Ward No.20, Providing CC Road with SWD at Teachers Colony, Ward No.21 in Walajapet Municipality | மதீப்பீட்டை விட +6.96% கூடுதலாகவும் | மதீப்பீட்டை விட +4.95% கூடுதலாகவும் |

**<u>அலுவலக குறிப்பு:</u>**

1.மேற்படி பணியினை குறித்த காலத்தில் முடிக்க வேண்டியுள்ளதாலும் மதிப்பீட்டை விட 4.95% கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள S.SureshKumar, Contractor, Rangapuram, Vellore.9, அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை பணியின் அவசியம் கருதி மன்றம் ஏற்கலாம்.

**<u>(ந.க.எண்:0025/2020/இ1).</u>**

3

இவ்வலுவலக உபயோகத்திற்காக தினமும் தி இந்து மற்றும் தினத்தந்தி தினசரி நாளிதழ்கள் வாங்கப்படுகின்றன. மேற்கண்ட நாளிதழ்கள் இவ்வலுவலகத்திற்கு 01.01.2020 முதல் 31.12.2020 வரை இரண்டு நாளிதழ்களை சப்ளை செய்ய ஒரு வருடத்திற்கான சந்தா தொகை ரூ.5000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.2020-21-ம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொதுநிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

3.நாளிதழ் அங்கீகாரம் பெற்ற கே.முருகன், தினசரி நாளிதழ் ஏஜெண்ட், வாலாஜாபேட்டை அவர்களுக்கு மேற்கண்ட தொகையினை வழங்கிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1616/2010/இ1)

4

நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர், வேலூார்-12 அவர்களின் கடிதம் ந.க.எண்:5725/2019/அ3, நாள்:30.12.2019-ந் தேதிய கடிதத்தில், பேர்ணாம்பட்டு நகராட்சியில் துப்புரவு பணியாளராக பணிபுரியும் திரு.எ.குட்டிபாபு, என்பவர் தனது சொந்த ஊர் வாலாஜாபேட்டை நகராட்சிக்கு அருகில் உள்ளதென்றும், குடும்ப நலன் கருதியும், தன்னை வாலாஜாபேட்டை நகராட்சிக்கு ஒருவழி பணியிட மாறுதல் கோரியுள்ளதற்கு உரிய மன்ற அனுமதி பெற்று தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி வைக்கும்படி கோரி வரப்பெற்றுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

துப்புரவு பணியாளர் பணியிடம் காலியாக உள்ளதால் அன்னாரை காலி பணியிடத்தில் பணியிட மாறுதலில் ஈர்த்துக்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்:044/2019/எச்1)

5

இந்நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்களில் குத்தகை இனங்களை ஒவ்வொரு ஆண்டுக்கும் குத்தகை தொகை 5% உயர்வின் அடிப்படையில் 01.04.2020 முதல் 31.03.2023 முடிய மூன்றாண்டு காலத்திற்கு குத்தகை இனங்களுக்கு எதிரே கண்டுள்ள ஏல வைப்புத்தொகை மற்றும் காப்புத்தொகை நிர்ணயம் செய்துள்ளவாறு பொதுஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | குத்தகை இனம் | ஏலக்கேள்வி பொறுப்புத் தொகை கை வங்கி வரைவோலை ரொக்கம் | 01.01.2020-க்கு பிறகு வட்டாட்சியரிட மிருந்து பெறப்பட்டு சமர்ப்பிக்க வேண்டிய சொத்து மதிப்பு சான்று | சொத்து மதிப்பு சான்று இல்லாதவர்கள் செலுத்த வேண்டிய கூடுதல் ஏலப் பொறுப்புத் தொகை வங்கி வரைவோலை/ ரொக்கம். |
|---|---|---|---|---|
| 1 | வாலாஜாபேட்டை நகராட்சிக்கு சொந்தமான நகராட்சி திருமண மண்டபம் குத்தகை உரிமம் | ரு.2,50,000/- | 10,00,000/- | 5,00,000/- |
| 2 | வாலாஜாபேட்டை நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்திற்கு தினசரி வந்து போகும் அனைத்து போருந்துகளுக்கும் சுங்கக்கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | 25,000/- | 5,00,000/- | 50,000/- |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | வாலாஜாபேட்டை நகராட்சிக்கு சொந்தமான மாடு அறுக்கம் தொட்டியில் சுங்கக்கட்டணம் வசூலிக்கும் உரிமை(நகரமன்ற தீர்மானம் எண்: 176, நாள்: 30.07.2014 – ன்படி ஒரு மாடு அறுக்க சுங்கக்கட்டணம் ரூ.100/- | 1,00,000/- | 7,00,000/- | 1,00,000/- |
| 4 | நகராட்சி தினசரி மார்க்கெட் நவின கட்டணகழிப்பிடம் வசூல் செய்யும் உரிமம். | 2,00,000/- | 10,00,000/- | 4,00,000/- |
| 5 | நகராட்சி பூசாலிப்பச்சையப்பன் தெருவில் உள்ள நவீன கட்டண கழிப்பிடம் | 30,000/- | 4,00,000/- | 1,00,000/- |
| 6 | இந்திரா நகர் குடோன் | 21,060/- | 50,000/- | 1,00,000/- |
| 7 | கங்கை கொண்டான் மண்டபம் தெரு வரிவிதிப்பு எண்.181, கடை எண்:12. | 12,600/- | 25,000/- | 50,000/- |
| 8 | நகராட்சி அலுவலக முன்புற மேல்மாடி வரிவிதிப்பு எண்:124 கடை எண்:11 | 12,600/- | 25,000/- | 50,000/- |

**அலுவலகக்குறிப்பு:**

1.மேற்கண்ட ஆண்டு குத்தகை இனங்களை மூன்று ஆண்டுகளுக்கு 01.04.2020 முதல் 31.03.2023 வரையான காலத்திற்கு பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.

2.தினசரி தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்யவும் மற்றும் ஏல அறிக்கையினை அச்சிடவும் அதற்கான தோராய செலவினத்திற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்:270/2020/அ1

தனிஅலுவலர்(ம)ஆணையர்,
வாலாஜாபேட்டை நகராட்சி.